மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்.

முன்னிலை : திரு.ஆர்.பாக்கியராஜ், பி.ஏ., பி.எல்.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், கிருஷ்ணராயபுரம்.

திருவள்ளுவராண்டு 2056 விசுவாவசு வருடம், சித்திரை மாதம் 04–ஆம் நாள்

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 – ஆம் நாள் வெள்ளிக்கிழமை

சுருக்கு விசாரணை வழக்கு எண். 154/2025

CNR.NO.TNKR11-000590-2025

அரசுக்காக
காவல் உதவி ஆய்வாளர்,
மாயனூர் காவல் நிலையம்.
(காவல்நிலைய குற்ற எண்.170/2025)
சட்டப்பிரிவு: 296 (b), 115 (2) BNS ...குற்ற முறையிடுபவர்.

/ எதிர்/

இளங்கோவன், (வயது 28)
த/பெ. சண்முகம்,
நெ.1/103 A, திருக்காம்புலியூர்,
கிருஷ்ணராயபுரம் தாலுக்கா,
கரூர் மாவட்டம். ...எதிரி.

1.	Name of the court	District Munsif Cum Judicial Magistrate, Krishnarayapuram
2.	Name of the Judge	Thiru.R.Bagyaraj, B.A., B.L.,
3.	Date of Judgment	17.04.2026
4.	Case Number along with CNR Number	STC 154/2025, CNR.NO.TNKR11-000590-2025
5.	Name of the Parties of the case	Sub Inspector of Police Mayanoor P.S. /Vs/ Elangovan
6.	Date of Occurrence	05.07.2025

7.	Date of Complaint	05.07.2025
8.	Date of Arrest if any and Remand	05.07.2025
9.	Period of remand of the accused	Nil
10.	Date of Release on bail	05.07.2025
11.	Date of Final report	17.07.2025
12.	Date of Committal of the case to the Court of Session	Nil
13.	Date of questioning of the accused U/s.296 (b), 115(2) BNS	10.09.2025
14.	Date of examination in Chief and Cross examination of the witness	No. of. Witness Chief Cross PW-1 23.10.2025 - PW-2 26.03.2026 - PW-3 26.03.2026 - PW-4 26.03.2026 - PW-5 27.03.2026 27.03.2026
15.	Date of filing of all miscellaneous petitions and their results including the results on challenge before Superior Courts except routine petitions like petition under section	Nil

	317 of the Code	
16	Date of examination of the accused U/s. 313 of the Code	30.03.2026
17.	Details of abscondence of an accused and his appearance/production as the case may be	Nil
18.	Grant of stay by Superior Courts and the results thereof	Nil
19.	Date of Commencement of Trial	23.10.2025
20.	Date of closure of Trial	27.03.2026
21.	Date of Sentence or order	17.04.2026
22.	Date of service of copy of judgment to the accused	Nil
23.	If any delay, give explanation	No

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் 13.08.2025–ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 30.03.2026 ஆம் நாள் என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்து, அரசுக்காக கற்றறிந்த அரசு உதவி வழக்கறிஞர் நிலை 1 திருமதி.S.பெரியமறத்தி அவர்கள் ஆஜராகி எடுத்துரைத்தும், எதிரிக்காக வழக்கறிஞர் திரு.R.கார்த்திக் அவர்கள் ஆஜராகி எடுத்துரைத்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

புகார்தாரர்	அரசுக்காக, காவல் ஆய்வாளர், மாயனூர் கா. நி. கு. எண். 170/2025
எதிரியின் பெயர்	இளங்கோவன், (வயது 28) த/பெ. சண்முகம், நெ.1/103 A, திருக்காம்புலியூர், கிருஷ்ணராயபுரம் தாலுக்கா, கரூர் மாவட்டம்.
அரசு தரப்பில் எதிரி மீது சாட்டப்பட்ட குற்றம்	U/s. 296 (b), 115 (2) BNS
நீதிமன்றத்தால் எதிரி மீது சாட்டப்பட்ட குற்றம்	U/s. 296 (b), 115 (2) BNS
எதிரியின் பதில்	குற்றவாளி அல்ல
நீதிபதியின் முடிவு	குற்றவாளி அல்ல
அரசு கூடுதல் குற்ற வழக்கறிஞர்	திருமதி.S.பெரியமறத்தி
எதிரி தரப்பு வழக்கறிஞர்	திரு.R.கார்த்திக்
இருதரப்பு வாதம் கேட்கப்பட்ட நாள்	30.03.2026
தீர்ப்பு வழங்கப்பட்ட நாள்	17.04.2026

தீர்ப்புரை

இவ்வழக்கானது மாயனூர் காவல் நிலையம், காவல் சார்பு ஆய்வாளர் அவர்களால் BNSS பிரிவு 193–இன் கீழ் 05.07.2025 ஆம் தேதியிட்ட இறுதி அறிக்கையின் அடிப்படையில் எதிரி மீது பிரிவு 296 (b), 115 (2) BNS – ன் கீழான குற்றச்சாட்டுக்காக கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வழக்காகும்.

1.இறுதியறிக்கையின் சுருக்கம்

இவ்வழக்கின் சாட்சி –1 பாலக்குமாருக்கும், எதிரி இளங்கோவனுக்கும் சிறுசிறு பிரச்சனைகள் இருந்து வந்ததால் அவர்களுக்குள் முன் விரோதம் இருந்து வந்தது. இந்நிலையில் வழக்கு சம்பவ நாளான 05.07.2025 ம் தேதி நள்ளிரவு சுமார் 00.30 மணியளவில் சாட்சி–1 பாலக்குமாருக்கு தலை வலிப்பது போல் இருந்ததால் சித்தலவாய் செல்வதற்காக

திருக்காம்புலியூர் பஸ் ஸ்டாப் அருகில் செல்வதை பார்த்த எதிரி இளங்கோவன் உனக்கென்னடா இங்க வேலை புண்டை என்று கெட்ட வார்த்தையால் திட்டி கையால் சாட்சி –1 பாலக்குமார் கன்னத்தில் அடித்து வலியை ஏற்படுத்தியுள்ளார். எனவே, எதிரியின் செய்கையானது சட்டப்பிரிவு 296 (b), 115 (2) BNS ன் படி தண்டிப்பட வேண்டியவாகிறார் என்பது அரசு தரப்பு வழக்காகும்.

2) மாயனூர் காவல் நிலைய உதவி ஆய்வாளரால் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கை எதிரியின் மீது BNS பிரிவு 193 ன் படி கருத்திற்கொண்டு சட்டப்பிரிவு 296 (b), 115 (2) BNS – ன் கீழாக கோப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்ப உத்திரவிடப்பட்டது.

3) எதிரி முன்னிலையானவுடன் அவருக்கு BNSS பிரிவு 230–ன் படி வழக்கு ஆவணங்களின் நகல்கள் வழங்கி, எதிரியிடம் குற்றம் பற்றி வினவப்பட்டது. பின்னிட்டு எதிரியின் மீது சட்டப்பிரிவு 296 (b), 115 (2) BNS – ன் கீழ் குற்ற சராம்சம் எடுத்துரைத்து விளக்கிக் கூறி வினவிய போது எதிரி தன் மீதான குற்றத்தை மறுத்துரைத்தார். எனவே, அரசு தரப்பு சாட்சிகளை விசாரிக்க இந்த வழக்கில் வகை செய்யப்பட்டது.

4) இந்த வழக்கில் அரசு தரப்பில் பட்டியல் சாட்சி 1 முதல் 7 வரை குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.1 முதல் அ.சா.5 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அரசு தரப்பில் சான்றாவணங்கள் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அரசு தரப்பில் சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. எதிரியின் தரப்பில் சாட்சிகள் எதுவும் விசாரணை செய்யப்படவில்லை. சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5) அரசு தரப்பு சாட்சியங்கள் மூலம் வெளிப்படும் வழக்கு சங்கதிகள்:–

அ.சா.1 திரு.பாலகுமார் அ.சா.1 கொத்தனார் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 கொத்தனார் வேலை செய்து வருகிறார். ஆஜர் எதிரியை தெரியும். அ.சா.1 ன் உறவினர் ஆவார். வழக்கு பற்றி அ.சா.1 க்கு எதுவும் தெரியாது. அ.சா.1 யிடம் காட்டப்படும் புகார். புகாரிலுள்ள கையொப்பம் அ.சா.1 உடையது தான். வேறு எதுவும் அ.சா.1 க்கு தெரியாது. போலிசார் அ.சா.1 ஐ விசாரிக்கவில்லை.

அ.சா.5 திருமதி.ஆர்த்தி உதவி ஆய்வாளர் மற்றும் புலன் விசாரணை அதிகாரி கடந்த 05.07.2025 ம் தேதி நிலைய பொறுப்பில் இருந்தபோது பாலகுமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பற்றி நிலைய குற்ற எண்.170/2025 ன் படி சட்டப்பிரிவுகள் 296(b), 115 (2) BNS படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து சம்பவயிடம் சென்று சாட்சிகள் சேதுராமன், விஜயகுமார் ஆகியோர் முன்னிலையில், பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். சாட்சிகள் பாலக்குமார், மதன், விக்னேஷ்வரன், சேதுராமன், விஜயகுமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். சம்பவம் உண்மை என தெரிய வந்ததன் பேரில் எதிரியை அன்றைய தினமே நிலையத்தில் வைத்து 19.30 மணிக்கு கைது செய்து காவல் நிலைய பிணையத்தில் விடுவித்து இறுதியறிக்கை தாக்கல் செய்தார்.

6) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள், சங்கதிகளிலிருந்து எதிரிக்கு பாதகமாகத் தோன்றும் பகுதிகளைத் தொகுத்து 351 (1)(பி) ன் கீழ் எதிரியிடம் எடுத்துரைத்து வினவியபோது எதிரி அரசு தரப்பு சாட்சியத்தை பொய் என்றும், தன் மீதான வழக்கு பொய் என்றும், எதிரி தரப்பில் சாட்சிகள் இல்லை என்று கூறினார்.

7) **<u>அரசு தரப்பு வாதம் :–</u>**

அரசு தரப்பில் ஆஜரான அரசு உதவி வழக்கறிஞர் எதிரிக்கெதிராக அ.சா.1 மற்றும் அ.சா.5 சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், சான்றாவணங்கள் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரை குறியீடு செய்யப்பட்டும், புலன் விசாரணை அதிகாரி அரசு தரப்புக்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளார் என்றும், அதனால் எதிரியின் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளதால் எதிரி மீது ச.பி. 296 (b), 115 (2) BNS – ன் படி தண்டிக்கத் தகுந்தவர் என்று வாதிடப்பட்டது.

8) **<u>எதிரி தரப்பு வாதம் :–</u>**

எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தரப்பில், இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சிகள் பிறழ் சாட்சியாகிவிட்டார்கள் என்றும், எதிரிக்கு எதிராக குற்றம் முகாந்திரம் நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே எதிரியை வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என வாதிடப்பட்டது.

9) இருதரப்பு கற்றறிருந்த வழக்கறிஞர்களின் வாதம் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு ஆவணங்கள் அனைத்தும் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. தற்போது வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயம், **அரசு தரப்பில் எதிரி மீது எடுத்துரைத்த குற்றசாம்சம் சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபிக்கப்பட்டுள்ளதா**? என்பதே ஆகும்.

10) தீர்வு

அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:–

இவ்வழக்கின் சாட்சி –1 பாலக்குமாருக்கும், எதிரி இளங்கோவனுக்கும் சிறுசிறு பிரச்சனைகள் இருந்து வந்ததால் அவர்களுக்குள் முன் விரோதம் இருந்து வந்தது. இந்நிலையில் வழக்கு சம்பவ நாளான 05.07.2025 ம் தேதி நள்ளிரவு சுமார் 00.30 மணியளவில் சாட்சி–1 பாலக்குமாருக்கு தலை வலிப்பது போல் இருந்ததால் சித்தலவாய் செல்வதற்காக திருக்காம்புலியூர் பஸ் ஸ்டாப் அருகில் செல்வதை பார்த்த எதிரி இளங்கோவன் உனக்கென்னடா இங்க வேலை புண்டை என்று கெட்ட வார்த்தையால் திட்டி கையால் சாட்சி –1 பாலக்குமார் கன்னத்தில் அடித்து வலியை ஏற்படுத்தியுள்ளார். என்பது அரசு தரப்பு வழக்காகும்.

11) அ.சா.1 பாலகுமார் புகார்தாரர் தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரியை தெரியும். அ.சா.1 ன் உறவினர் என்றும், வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றும், அ.சா.1 யிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் அ.சா.1 உடையது என்றும், சாட்சியம் அளித்து பிறழ் சாட்சியாகியுள்ளார்.

12) அ.சா.ஆ.1 புகாரில் உள்ள கையொப்பம் மற்றும் அ.சா.ஆ.2 புகார் அ.சா.1 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி புகாரை உற்றுநோக்கும் போது கடந்த 05.07.2025–ம் தேதி 00.30 மணிக்கு புகாரை பெற்று நிலைய குற்ற எண்.170/2025, BNS பிரிவுகள் 296(b), 115(2) –ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாக உள்ளது. அ.சா.1 புகார்தாரர் வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்று பிறழ் சாட்சியாகியுள்ளார்.

13) அ.சா.1 முதல் அ.சா.4 வரையான சாட்சிகள் அரசு தரப்புக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் பிறழ் சாட்சியாகியுள்ளனர். இருந்தபோதிலும், அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்த போதும், அரசு தரப்புக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை.

14) அ.சா.5 திருமதி.ஆர்த்தி புலன் விசாரணை அதிகாரி புகாரைப் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து சாட்சிகள் விசாரித்து இறுதியறிக்கை தாக்கல் செய்வது பற்றி சாட்சியம் அளித்துள்ளார்.

15) அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை மேற்படி ஆவணத்தை உற்றுநோக்கும்போது கடந்த 05.07.2025ம் தேதி குற்ற எண்.170/2025 ன் படி பதிவு செய்யப்பட்டு 16.07.2025 அன்று நீதிபதியால் பெறப்பட்டுள்ளது காலதாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டதற்கான காரணம் குறிப்பிடவில்லை. இது அரசு தரப்பு வழக்கை சந்தேகத்திற்கு உட்படுத்துகிறது.

16) அ.சா.ஆ.4 ஆக பார்வை மகசர் குறியீடு செய்யப்பட்டுளள்து. மேற்படி ஆவணத்தில் சம்பவயிடத்திலிருந்து காவல் நிலையம் சுமார் 2.5 கி.மீ தென்மேற்கில் உள்ளது. சம்பவயிடமானது கரூர் – திருச்சி மெயின் ரோடு திருக்காம்புலியூர் பேருந்து நிலையம் அருகே சம்பவம் நடந்ததாக குறிப்பிட்டு அருகில் என்னென்ன உள்ளது என்று எழுதப்பட்டுள்ளது. அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம் மேற்படி ஆவணத்தை உற்றுநோக்கும்போது கரூர் – திருச்சி மெயின் ரோட்டில் திருக்காம்புலியூர் செல்லும் ரோடு – காவேரி ஆற்றுக்கு செல்லும் மண்பாதை அருகில் சம்பவம் நடந்த இடம் காட்டப்பட்டுள்ளது. சம்பவயிடத்திற்கு சென்று பார்வையிடமால் அங்கு உள்ள தன்மைகளை பார்வை மகசரிலும், மாதிரி வரைபடத்திலும் குறிப்பிட முடியாது. அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5 ஆவணங்களை உற்றுநோக்கும்போது புலன் விசாரணை அதிகாரி சம்பவ இடத்திற்கு சென்று பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் என்ற சங்கதி நிரூபிக்கப்பட்டுள்ளது.

17) புகார்தாரர் நேரில் பார்த்த சாட்சி ஆகியோர்கள் பிறழ் சாட்சி ஆகியுள்ளார்கள். அவர்களில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோதும், அரசு தரப்புக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை. புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை வைத்து மட்டும் எதிரி மீது எடுத்துரைக்கப்பட்ட குற்ற முகாந்திரம் நிரூபிக்கப்பட்டதாக எடுத்துக்கொள்ள முடியாது. எதிரி மீது 296(b), 115(2) BNS ன் படியான குற்ற முகாந்திரம் நிரூபிக்கவில்லை என்றும், எதிரி மேற்படி பிரிவின் கீழ் குற்றவாளி அல்ல என்றும் விடுதலை பெறத்தக்கவர் என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

18) இறுதியில், எதிரி 296(b), 115(2) BNS ன் படி குற்றவாளி அல்ல என்று என தீர்மானித்து பிரிவு 278(1) BNSS –ன் கீழ் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

எதிரியிடமிருந்து காவல் நிலையத்தில் பெற்ற பிணைப்பத்திரம் மேல் முறையீட்டுக்காலத்திற்கு பின்னிட்டு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. வழக்கு சொத்து தாக்கல் இல்லை. அதனால் வழக்கு சொத்து பற்றி உத்தரவு எதுவும் பிறப்பிக்கவில்லை.

2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17–ம் நாள் இத்தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு இன்று என்னால் சரிபார்க்கப்பட்டு இந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RAMAIYAH BAGYARAJ
Digitally signed by RAMAIYAH BAGYARAJ
Date: 2026.04.20 01:14:04 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.

<u>பின் இணைப்பு</u>

<u>அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள்</u>

அ.சா.1	பாலகுமார் (புகார்தாரர்)
அ.சா.2	மதன் (நேரில் பார்த்த சாட்சி)
அ.சா.3	விக்னேஷ்வரன் (நேரில் பார்த்த சாட்சி)
அ.சா.4	விஜயகுமார் (பார்வை மகசர் சாட்சி)
அ.சா.5	திருமதி.ஆர்த்தி (புலன் விசாரணை அதிகாரி)

<u>அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள்</u>

அ.சா.ஆ.1	புகாரில் உள்ள கையொப்பம்
அ.சா.ஆ.2	புகார்
அ.சா.ஆ.3	முதல் தகவல் அறிக்கை
அ.சா.ஆ.4	பார்வை மகசர்
அ.சா.ஆ.5	மாதிரி வரைபடம்

அரசு தரப்பில் சான்று பொருட்கள் :– இல்லை

எதிரி தரப்பில் சாட்சி, சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருள்:– இல்லை.

RAMAIYAH BAGYARAJ
Digitally signed by RAMAIYAH BAGYARAJ
Date: 2026.04.20 01:14:09 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.

பின்சேர்க்கை:

1. தீர்ப்பு விவரம் காவல் துறைக்குத் தெரிவிக்கப்பட்டது.
2. விசாரணைக் காலத்தில் எதிரி பிணையில் இருந்து வந்துள்ளார்.
3. எந்த சாட்சியும் விசாரணைக்காக 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.